இதை உணர்ந்து நம்முடைய அரசாங்கம் வேறொரு இலாக்காவிற்கு இதை மாற்றுவதற்கான திட்டங்களை இப்பொழுது ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று அறிகிறேன். வேறொரு துறைக்கு இதை மாற்றுவதற்குப் பதிலாக, தனியாகவே ஒரு இயக்குநரை நியமிக்குமா? ஆண்டுக்கு 80,000 பேர் எழுதக் கூடிய ஒரு தேர்வுக்கு தனி இயக்குநரை நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட காலத்தாழ்வு மூலமாக ஏற்படுகிற சங்கடங்கள் அறியப்படுகின்றன. கால தாமதம் ஏற்படாத வகையில் திருத்த என்ன ஏற்பாடுகளைச் செய்யலாமோ அந்த ஏற்பாடுகளைச் செய்யலாம். அதற்கு என்ன மாற்றுத் திட்டங்கள் என்று கண்டறிந்து தாமதத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.

S.I.E.T College for Women at Madras

* 466 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: **Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether it is a fact that the gas cylinder in the S.I.E.T. College, Madras burst about the 13th February 1971 causing injuries to a number of students?**

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: 1971-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13-ஆம் நாளன்று, கல்லூரி நீச்சல் குளத்தின் அருகே திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்த, பெரும்பாலும் காலியாயிருந்த குளோரின் வாயு உருளையி லிருந்து வாயு சிறிது கசிந்து வெளியேறியது. எனவே, வாயு உருளை எதுவும் வெடிக்கவில்லை. இதற்கு அருகில் இருந்த சுமார் 100 மாணவிகள் இவ் வாயுவை உள்ளிழுத்ததன் காரணமாக, அவர்களுக்கு மூச்சுத் திணறியது. அவர்கள் மருத்துவ மனையில் சிகிச்சை யளிக்கப்பட்ட பின்னர் அனுப்பப்பட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 467, 468, 469 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் சேர்ந்தாற்போல் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

*467 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை S.I.E.T. பெண்கள் கல்லூரிக்கு அரசு அளித்து வரும் ஆசிரியர் மானியத் தொகை கடந்த மூன்று ஆண்டுகளாகத் தரப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். (இ) S.I.E.T. கல்லூரி 1969-70-ம் ஆண்டிற்கு அப்பொழுது இருந்து வந்த ஒரு மாணவிக்கு ஒரு பகுதிக்கு ரூ. 70 என்ற புகுமுக வகுப்புக்கான கட்டண ஈட்டை, விவாதத்திற்குப் பிறகு ஒப்புக் கொண்டது. இக் கல்லூரிக்கு ரூ. 1.81 லட்சம் கட்டண ஈடாகவும் வழங்கப்பட்டது. இக்கல்லூரி எற்கெனவே ஒரு

1971 ஜூலை 27]

மாணவிக்கு ஒரு பகுதிக்கு ரூ. 80 என்ற அடிப்படையில் கட்டணம் வசூலித்திருந்தால், அரசு அதை மாணவிகளுக்குத் திருப்பித் தந்துவிடும்படியும் அவ்வாறு கொடுக்கப்பட்ட மாணவிகளின் பட்டியல் ஒன்றைக் கொடுக்கும்படியும் கேட்டிருந்தது. கல்லூரிக் கல்வி இயக்குனருக்கு மேற்படி பட்டியலைக் கொடுக்க இக் கல்லூரி மறுத்துவிட்டது. மேலும், கல்வி மான்யம் பெறுவதற்கான இதன் கோரிக்கையும் உரிய முறையில் இல்லை. மேற்படிக் காரணங்களுக்காக 1969-70, 1970-71 ஆண்டுகளுக்கான கல்வி மான்யம் வழங்கப்படவில்லை. 1969-70-க்கு பி.யு.சி. வகுப்புக்கான கட்டண ஈடாக வழங்கிய ரூ. 1.84 லட்சத்தை ஆட்சேபணைக் கணக்கில் வைத்துள்ளது.

*468 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை S.I.E.T. மகளிர் கல்லூரி மாணவிகளைச் சேர்க்கும் முறையில் அரசு ஏதாவது ஆட்சேபணை தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): மாணவிகளைச் சேர்க்கும் முறைபற்றி எத்தகைய எதிர்ப்பும் எழுப்பப்படவில்லை. புகுமுக வகுப்புகளில் இலவசக் கல்வி அளிக்கும் முறை பற்றி அரசு வெளியிட்டுள்ள எல்லாத் தனியார் கல்லூரிகளுக்கும் பொருந்துகின்ற விதிகளையும் ஆணைகளையும் இக் கல்லூரி பின்பற்ற வேண்டும் என்று அரசு விரும்பியது.

*459 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை S.I.E.T. மகளிர் கல்லூரியில் மாணவிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட ட்யூஷன் பீஸ் விஷயமாக அரசு ஆட்சேபணை ஏதும் தெரிவித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி அளித்தல் என்ற கொள்கையை ஒட்டி, அரசு, 1969-70-லிருந்து புகுமுக வகுப்புகளுக்கு இலவசக் கல்வி அளிக்கும் முறையை விரிவாக்கவும், கல்லூரிகளுக்குக் கட்டணம் வசூலிக்காமையால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யவும் ஆணைகள் வெளியிட்டது. S.I.E.T மகளிர் கல்லூரி அரசின் மேற்படி ஆணைகளைப் பின்பற்றாமல் 1969-70, 1970-71-ம் ஆண்டுகளில் புகுமுக வகுப்பு மாணவிகளிடமிருந்து முன் பணமாகக் கட்டணம் வசூலித்தது. அரசினிடமும் இதற்கு ஈடு கேட்டது. அரசிலிடம் உதவித் தொகை பெறும் கல்லூரி என்ற முறையில் அரசின் சட்டங்களுக்கு இக் கல்லூரி உட்பட்டதே ஆகும். ஆகவே புகுமுக வகுப்புகளில் இலவசக் கல்வித் திட்டத்தை இக் கல்லூரியிலும் பின்பற்றியிருக்க வேண்டும். 1969-70, 1970-71-ம் ஆண்டுகளில் புகுமுக வகுப்புக் கல்விக் கட்டணம் வசூலித்திருக்கக் கூடாது. முன்பணமாக மாணவிகளிடமிருந்து கட்டணம் வசூலித்ததுமல்லாமல் 1969-70-ம் ஆண்டிற்குரிய புகுமுக வகுப்பிற்குரிய